உலகில் சுதந்திரம் இனி கிருமிகளிடம்..!

பறவைகள் போல், மீன் காட்டுச்செடிகள் போல் இயற்கையாய் மனிதன் வாழ்வதற்குரிய சூழலே சுதந்திரமாகும்.மற்றெல்லாம் அடிமைத்தனமாகும். எதையும் தராமலேயே பெற்றுக்கொள்வது கிருமி நோய்.!இலவசமாய் கொடுத்து பின் மருந்தில் பணமீட்டுவது கிருமி வணிகம்.இது கணிணி தொழிலில் சகஜம்.நம் சுதந்திரத்தை மறுக்கும் பலதையும் ஏனென்று மனம் கேட்காதபோதும் ஏன்.? ஏனென்று கிருமிகள் ஏனென்று எல்லோரும் கேட்கவேண்டும்.!

உன் குடியுரிமை சந்தேகபட்டால் அடைத்திடும் திறந்தவெளி கொட்டடிகள் இனி கிருமி தாக்கியதென்றால் அடைக்கவும் பயன்படும். கெட்டவனைக்கொல்ல கிருமி பயன்பட்டது கருடபுராணத்தில்..! 2012ல் சவுதிஅரேபியாவில் கொரானா பரவியபோது ஒட்டகம் பாலைவன வெளவாலிருந்து என்றனர். உலகம் நம்பியது.மருந்தும் சுதந்திரமும் அமோகமாய் விற்பனையானது. பின்னர் பறவை-பன்றிக்காய்ச்சல்..! தமிழ்நாட்டில் மருந்தில்லா டெங்கு.. தற்பொழுது பாம்புப்புழுவிலிருந்து கொரானா..! இத்தாலி சீனாவிற்கு அண்டைநாடல்ல.. இத்தாலியில் 1804 பேர் இறந்துள்ளனர். உலகை அடிமைப்படுத்திய ஐரோப்பா கண்டமே வீட்டிற்குள் அடைபட்டு சுதந்திரமற்றுள்ளது.அளவு மீறினால் அமுதும் நஞ்சாகும்..காத்திட நீலகண்டன் வரமாட்டான். உலகில் இஸ்ரேல் உள்ளிட்டு ஏறத்தாழ 15 நாடுகளில் ராணுவ கிருமி பரிசோதனை தயாரிப்புக்கூடம் உள்ளது. சீனா அமெரிக்காவின் நெருக்கமான நட்பு நாடு. அமெரிக்க ஐரோப்பிய தொழில்நுட்ப உதவியை எந்த நடிகனின் விளம்பரமின்றி தன் கோடிக்கரங்களை பயன்படுத்தியதால் சீனா கோபுர உச்சிக்கு சென்றது.! நட்பு பகையானது. சீனத்தில் உகான் நகரிலிருந்து 32கிமீ தூரத்தில் உள்ள ராணுவ கிருமி பரிசோதனை தயாரிப்புக்கூடத்தில் கொரானா கிருமி இல்லை. வேறொரு கூடத்திலிருந்து...இது எப்படி என்று நண்பனிடம் கேட்கமுடியாத நிலை. புதிய கிருமி என்று உலகிற்கு அறிவித்துவிட்டு தன் மக்களை காத்து தற்பொழுது வடகொரியா போல் சீனா தன் மெயின்லேண்டை யாரும் நுழையாமல் இறுக்கியுள்ளது.

விஸ்வரூபம்..! இல்லாத இடத்திலிருந்து..ஆப்கானிலிருந்து சீசியம் அணுக்கழிவு புறா மூலம் “பலலட்சம் டன்கள் அணுமின்சாரக்கழிவை” குவித்து வைத்திருக்கும் அமெரிக்காவை அழிக்கபோவதாய்...
ஒரு திரைப்படம் பார்ப்பதல்ல உன் வருங்காலம். உலகில் உள்ள கிருமி பரிசோதனை தயாரிப்புக்கூடங்களை இழுத்து மூடிட போராடவேண்டிய நேரமிது.! நம் சுதந்திரத்தை மறுக்கும் பலதையும் ஏனென்று மனம் கேட்காதபோதும் ஏன்.? ஏனென்று கிருமிகள் ஏனென்று எல்லோரும் இப்பொழுது கேட்கவேண்டும்.!

-அருள்சந் திருச்சி 19-03-2020